**வெயாங்கொடை மேம்பாலச் செயற்திட்ட உதவி**

---

**1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அது பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்

(இ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**நிதிசார் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களுக்கும் அமைய, 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற முதல் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 542.39 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினப் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| மேம்பாலக் கிரயம் | 268,764,065 |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 5,110,784 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 268,513,624 |
| | 542,388,473 |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 நிதிப் பயன்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரமும் கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களுக்கும் அமைய, 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற முதல் கணக்கீட்டுக் காலப்பகுதிக்குரிய செயற்திட்டத்திற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, நிதிப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வு காலப்பகுதியின்போது பயன்படுத்தப்பட்ட நிதி 2012 |
|---|---|---|---|---|
| | ஈயூஆர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஸ்பெயின் | 11.22 | 1,814 | - | 517.5 |
| இஅ | - | 550 | 150 | 2.0 |
| மொத்தம் | 11.22 | 2,364 | 150 | *519.5 |

❖ ஆண்டு முடிவிலான கொடுப்பனவு செய்யப்பட வேண்டியன சேர்த்துக் கொள்ளப்படாமையால், இவ்வறிக்கையின் 4 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட தொகையுடன் இத்தொகை இணக்கமுறவில்லை.